தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தின் கடலோர பகுதிகளில் இன்று மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

தமிழகத்தின் கடலோர பகுதிகளில் சனிக்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: குமரிக் கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, தென் மேற்கு வங்கக் கடல், அரபிக் கடல் ஒட்டிய பகுதியில் உள்ளது. இதனால் கடலோர தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்யும். இந்த தாழ்வு நிலை மேலும் வலுப்பெற வாய்ப்பில்லை. உள்மாவட்டங்களில் வறண்ட வானிலையே நிலவும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணிநேர நிலவரப்படி காட்டுமன்னார்கோயிலில் 50 மி.மீ. மழை பெய்துள்ளது. வேதாரண்யத் தில் 40 மி.மீ. மழையும், பாபநாசம், தொண்டியில் 30 மி.மீ. மழையும் பெய்துள்ளது. கமுதி, சிவகங்கை, சமயபுரம், பெரம்பலூர், ஸ்ரீமுஷ்ணம், ராமநாதபுரம், கொடைக்கானல் (20 மி.மீ.), விராலிமலை, பழனி, நத்தம், சீர்காழி, முசிறி, மேலூர், கும்பகோணம், கல்லணை, அரியலூர், துறையூர், கன்னியாகுமரி (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

### கோழிக்கொண்டை பூக்களுக்கு அதிக விலை: விவசாயிகள் மகிழ்ச்சி



திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை, அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் பயிரிடப்படும் கோழிக்கொண்டைப் பூக்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இந்த கோழிக்கொண்டைப் பூக்களின் விதையானது

90 நாள்களில் வளர்ந்து செடியாகும். பின்னர் அவை பூக்கத் துவங்கும். தொடர்ந்து 90 நாள்கள் முதல் 120 நாள்கள் வரை பயன் தரும். இந்தக் கோழிக்கொண்டைப் பூக்களுக்கு பூச் சந்தைகளில் தற்போது அதிக வரவேற்பு உள்ளது. நல்ல விலைக்கு சந்தைகளில் இந்தப் பூக்கள் வாங்கப்படுவதால் இதைப் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கிலோ ஒன்றுக்கு ரூ. 60 வரை சந்தைகளில் விற்கப்படுகிறது. இந்தப் பூக்கள் ஊத்துக்கோட்டை, பூண்டி, போந்தவாக்கம், வெங்கல், அதைச் சுற்றிய கிராமப் பகுதிகளில் அதிகம் பயிரிடப்படுகிறது. மல்லிகைப் பூக்கள் ரூ.600 வரை விற்கப்படுவதால் காக்கட்டான் எனப்படும் வாசமில்லா பூக்களுக்கு சந்தையில் வரவேற்பு அதிகமாக உள்ளது. இது கிலோ ரூ.100 முதல் ரூ.150 வரை கிடைக்கிறது. மஞ்சள் சாமந்திப் பூக்கள் ரூ 50க்கு கிடைக்கிறது.

## <u>விவசாயிகளுக்கு நேரடி உர மானியம்: நாடாளுமன்றக் குழு பரிந்துரை</u>



விவசாயிகளுக்கு உர மானியம் நேரடியாக வழங்கப்பட வேண்டும் என்று ரசாயனங்கள், உரங்களுக்கான நாடாளுமன்றக் குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது. இதுதொடர்பாக அக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: உரத்துக்கான மானியம் தற்போது உரத் தயாரிப்பு நிறுவனங்களுக்கு அரசால் நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது. சந்தை விலையில், யூரியாவின் விலை டன்னுக்கு ரூ.5,360 என அரசு நிர்ணயிக்குமானால், அப்போது யூரியாவை தயாரிக்க ஆகும் செலவு, சந்தை விலை ஆகியவற்றுக்கு இடையே நிலவும் வித்தியாசத் தொகை, அதை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப் படுகிறது. கலப்பு உரங்களைப் பொருத்த வரையில், அந்த உரத்தின் விலையை அதைத் தயாரிக்கும் நிறுவனங்கள் சுதந்திரமாக நிர்ணயித்து வருகின்றன. அதேபோல், அந்த உரங்களுக்கான மானியத்தை அரசு

நிர்ணயித்து வருகிறது. இந்த முறைக்குப் பதிலாக, உரத்துக்கான மானியம் விவசாயிகளுக்கே நேரடியாக வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்குவதன் மூலம், உர மானியம் வழங்கும் முறையில் நிலவும் மோசடிகள், குறைபாடுகள், அக்கறையின்மை ஆகிய பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் எனக் கருதுகிறோம் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு உருளைக்கு மத்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மானியம், வாடிக்கையாளருக்கு நேரடியாக வழங்கும் திட்டம் தற்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர்கள் வாங்கும் சமையல் எரிவாயு உருளைக்கான மானியத் தொகை அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

## புகையான் நோய் தாக்குதலைத் தாங்கக்கூடிய நெல் ரகங்களைப் பயிரிட அறிவுறுத்தல்

திருவள்ளூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிர்களில் புகையான் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளதால் தாக்குதலைத் தாங்கக்கூடிய ரகங்களைப் பயிரிட வேண்டும் என விவசாயிகளுக்கு ஆட்சியர் கொ.வீரராகவராவ் அறிவுறுத்தினார். திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் கொ.வீரராகவராவ் பேசியதாவது: மாவட்டத்தில் தற்போது சம்பா பருவத்தில் பயிர் செய்யப்பட்டு வரும் பாபட்லா நெல் பயிர்களில் புகையான் தாக்குதல் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, பொன்னேரி வட்டாரத்தில் அதிக அளவில் இந்நோய் தென்படுகிறது. இந்த நோய்களைக் கட்டுப்படுத்தும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்து வேளாண் துறை அதிகாரிகளிடம் விவசாயிகள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். மேலும், புகையான் நோய் தாக்கத்தை தாங்கக்கூடிய பயிர் ரகங்களைத் தேர்ந்தெடுத்து பயிர் செய்ய வேண்டும். இறால் பண்ணைகளை ஒழுங்குப்படுத்துவதற்காக மீன்வளத் துறை, வருவாய்த்

துறை, வேளாண் துறை அலுவலர்களைக் கொண்ட கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றார் அவர். வயலுக்கு வரும் காட்டுப் பன்றிகளை ஈகோடான் மருந்தைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் மணிமாறன் விளக்கிக் கூறினார். திருவள்ளூர் துணை ஆட்சியர் ராகுல்நாத், வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரராஜன், துணை ஆட்சியர் (பயிற்சி), திவ்யாஸ்ரீ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுப்பிரமணியன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

## <u>தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் பரவலாக மழை</u>

தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை பரவலாக சாரல் மழை பெய்தது. திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன் பெய்த மழையின் காரணமாக ஒருசில ஏரிகள் நிரம்பின. அதே சமயத்தில் நிலக்கோட்டை, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய பகுதிகளில் உள்ள கண்மாய்களுக்கு நீர் வரத்து இல்லாததால் வறண்டு காணப்பட்டன. இந்நிலையில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக திண்டுக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி மற்றும் வீரபாண்டியில் அதிக அளவாக 10 மி.மீ., மழை பெய்துள்ளது. வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழையளவு (மி.மீட்டரில்): பெரியகுளம்- 5, வைகை அணை- 3.6, மஞ்சளாறு- 1, அரண்மனைப்புதூர்- 3, கூடலூர்- 7, போடி- 1, உத்தமபாளையம்- 8, சோத்துப்பாறை- 2. தேக்கடி 3 மி.மீ., மழை பெய்துள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பில் மழையில்லை. திண்டுக்கல் மாவட்டம்: திண்டுக்கல் 6.16, கொடைக்கானல் 15.50, நத்தம் 15,நிலக்கோட்டை 3.20, பழனி 15, வேடசந்தூர் 11, சத்திரபட்டி 11.10, வேடசந்தூ புகையிலை மையம் 11.20, கொடைக்கானல் போட் கிளப் 18, காமாட்சிபுரம் 8.80 என மொத்தம் 114.96 மீ.மீ மழை பெய்துள்ளது. சராசரியாக 11.50 மீ.மீ. மழை

திண்டுக்கல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. அணைகளின் நீர்மட்டம்: வைகை அணையின் நீர்மட்டம் 31.63 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 1,477 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 1,850 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர்மட்டம் 133.10 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 839 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 1,644 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

## "மண்புழு உரம் பயன்படுத்தினால் விவசாய பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும்

மண் புழு உரம் பயன்படுத்தினால் விவசாய பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும் என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி. கரூர் மாவட்டம், உப்பிடமங்கலம் பேரூராட்சிக்குள்பட்ட லிங்கத்தூரில் பேரூராட்சித் துறை மூலம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் குப்பைகள் ஒருங்கிணைக்கப்பட்டு மண்புழு உரம் தயாரிக்கப்படும் பணியை வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார். அங்கு செயல் அலுவலர் கணேசன் ஆட்சியரிடம் கூறுகையில், பேரூராட்சிக்குள்பட்ட பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 0.500 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றார். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி கூறுகையில், இத்திட்டத்தின் நோக்கமே பேரூராட்சி முழுவதும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். முழு சுகாதாரத்தை அனைவரும் பெற முடியும் என்ற அடிப்படையில்தான் அனைத்து குப்பைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் மண்புழு உரங்கள் தயாரிக்கப்படுகிறது. விவசாயிகள் அதிகளவில் மண்புழு உரங்களை பயன்படுத்தும்போது விவசாய பொருள்களின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கும். எனவே, பேரூராட்சித்துறை மூலம் அனைத்து பகுதிகளிலும் தொட்டிகள் வைத்து

விடுபடாமல் குப்பைகளை சேகரித்து அதிகளவில் மண்புழு உரம் தயாரித்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்பட வேண்டும். அதேவேளையில், பேரூராட்சி பகுதியில் முழு தூய்மையான பகுதி என்ற நிலையை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர். ஆய்வின்போது, உப்பிடமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் கணேசன், புஞ்சைத்தோட்டக்குறிச்சி செயல் அலுவலர் ரவி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வேதாரண்யத்தில் காற்றுடன் மழை

நாகை மாவட்டம், வேதாரண்யத்தின் கடலோரப் பகுதியில் வழக்கத்தைவிட வேகமான காற்றுடன் வெள்ளிக்கிழமை தொடர்ந்த மழையால் மீன்பிடித் தொழில் முடங்கியது. வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடலோரப் பகுதியில் மீண்டும் மழை பெய்து வருகிறது. வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி வேதாரண்யத்தில் 42 மி.மீ,தலைஞாயிறு-1.மி.மீ மழை பதிவானது. வெள்ளி காலை முதல் அவ்வப்போது மழை தொடர்ந்து. அப்போது கடலோரப் பகுதியில் வழக்கத்தைவிட சற்று வேகமான காற்று வடக்கு மற்றும் வடகிழக்கு திசையிலிருந்து வீசியது. வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை வேதாரண்யத்தில் 20.4 மி.மீ,தலைஞாயிறு 17.6 மி.மீ மழை பதிவானது. கடல்பரப்பில் காற்றின் வேகம் அதிகமாக இருந்ததாக மீனவர்கள் தெரிவித்தனர். இதன் காரணமாக கோடியக்கரை, ஆறுகாட்டுத்துறை போன்ற பகுதிகளில் இருந்து மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

## டிச. 26-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டிச. 26-ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: டிச. 26-ல்

நடைபெறவுள்ள விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள், முன்னோடி விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவித்து பயன் பெறலாம்.

## குடவாசலில் 20.4 மி.மீ. மழை

குடவாசலில் வியாழக்கிழமை 20.4 மில்லி மீட்டர் மழைப் பெய்தது. வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக மாவட்டத்தில் 3-வது நாளாக வெள்ளிக்கிழமையும் மழைப் பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது. தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை ஓரளவு பாதிக்கப் பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை அதிகாலையில் தொடங்கிய மழை இடைவிடாமல் பிற்பகல் 2 மணி வரை பெய்து கொண்டிருந்தது. பொதுமக்கள், பள்ளி மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டனர். திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக குடவாசலில் 20.4 மில்லி மீட்டர் மழைப் பதிவானது. பிற இடங்களில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு: முத்துப்பேட்டை - 16.4, வலங்கைமான் - 5.6, நன்னிலம் - 4.1, மன்னார்குடி - 3, பாண்டவையாறு தலைப்பு - 2, திருத்துறைப்பூண்டி, நீடாமங்கலம், திருவாரூர் - 1.2.

## விவசாயிகளுக்கு நேரடி உர மானியம்

விவசாயிகளுக்கு உர மானியம் நேரடியாக வழங்கப்பட வேண்டும் என்று ரசாயனங்கள், உரங்களுக்கான நாடாளுமன்றக் குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது. இதுதொடர்பாக அக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: உரத்துக்கான மானியம் தற்போது உரத் தயாரிப்பு நிறுவனங்களுக்கு அரசால் நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது. சந்தை விலையில், யூரியாவின் விலை டன்னுக்கு ரூ.5,360 என அரசு நிர்ணயிக்குமானால், அப்போது யூரியாவை தயாரிக்க ஆகும்

செலவு, சந்தை விலை ஆகியவற்றுக்கு இடையே நிலவும் வித்தியாசத் தொகை, அதை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. கலப்பு உரங்களைப் பொருத்த வரையில், அந்த உரத்தின் விலையை அதைத் தயாரிக்கும் நிறுவனங்கள் சுதந்திரமாக நிர்ணயித்து வருகின்றன. அதேபோல், அந்த உரங்களுக்கான மானியத்தை அரசு நிர்ணயித்து வருகிறது. இந்த முறைக்குப் பதிலாக, உரத்துக்கான மானியம் விவசாயிகளுக்கே நேரடியாக வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்குவதன் மூலம், உர மானியம் வழங்கும் முறையில் நிலவும் மோசடிகள், குறைபாடுகள், அக்கறையின்மை ஆகிய பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் எனக் கருதுகிறோம் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு உருளைக்கு மத்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மானியம், வாடிக்கையாளருக்கு நேரடியாக வழங்கும் திட்டம் தற்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர்கள் வாங்கும் சமையல் எரிவாயு உருளைக்கான மானியத் தொகை அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பருவநிலை மாறுபாடு உணவு உற்பத்தி குறையும் அபாயம்</u>**

ரோம்: உலகம் முழுவதும் மாறி வரும் பருவநிலை மாறுபாடு காரணமாக உணவு உற்பத்தி 18 சதவீம் அளவில் குறையும் என உலக சுற்றுச்சூழல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. லெக்கிளாரி மற்றும் மைக்கேல் ஒபர்ஸ்டினர் ஆகியோர் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது: உலகம் முழுவதும் பருவ நிலைமாறுபாடு காணப்படுகிறது. காலம் தவறி மழை பெய்து வருகிறது. தொழிற்சாலை

அதிகரிப்பு காரணமாக காடுகள் மரங்கள் அழிக்கப்பட்டு வருகிறது. இதனால் வான்வெளி மையத்தில் கரியமில வாயு அளவு அதிகரித்துவருகிறது. இதனை தவிர்க்கும் வகையில் ஒவ்வொரு நாடும் 25 சதவீதத்திற்கும் அதிகமான அளவில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும். இல்லையெனில் வரும் 2050-ம் ஆண்டிற்குள் 18 சதவீதம் அளவிற்கு உணவு உற்பத்தியில் குறைவு ஏற்படும் என தெரிவித்துள்ளனர்.

**வட மாநிலங்களில் மழை: வெங்காய விலை அதிகரிப்பு**



மும்பை: வடமாநிலங்களில் எதிர்பாராமல் பெய்த திடீர் மழை காரணமாக வெங்காய விலை அதிகரித்ள்ளது. வடமாநிலங்களில் தற்போது வெங்காய அறுவடை சீசன் துவங்கி. நடைபெற்று வருகிறது. இந்நிலையில் எதிர்பாராமல் மழை பெய்து வருவதால் வெங்காயம் அறுவடைக்கு தயாராக உள்ள நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதன் காரணமாக அறுவடை பணி பாதிக்கப்பட்டுள்ளது. மும்பையில் வியாழன் அன்று ஒரு குவிண்டால் விலை ரூ.2 ஆயிரத்து 100 என்ற அளவிற்கு விற்பனையானது. மேலும் ஆசியாவின் மிகப்பெரிய வெங்காய சந்தையான பிம்பல் கானிற்கு குறைந்த அளவே வெஙகாயம் வரத்து உள்ளதாக சந்தை குழுவின் இயக்குனர் அஜித்ஷாதெரிவித்ள்ளார்.

**மரவள்ளியில் மாவுப்பூச்சி தாக்குதல்பாதுகாப்பு முறை கையாள அறிவுரை**

ராசிபுரம், டிச. 19-ராசிபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் வெளியிட்ட அறிக்கை:ராசிபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில், 750க்கும் மேற்பட்டஏக்கர் பரப்பளவில் மரவள்ளி சாகுபடி செய்துள்ளனர். அதில், மாவுப்பூச்சி தாக்குதல் தென்படுவதால், அவற்றை கட்டுப்படுத்த பயிர்பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

மரவள்ளி, காட்டாமணக்கு, செம்பருத்தி, கொய்யா, தேக்கு, வெண்டை உள்ளிட்ட பயிர்களை மாவு பூச்சி அதிகளவில் தாக்கி வருகிறது. பாதிக்கப்பட்ட பயிர்களின் இலை உருமாறி சிறுத்து காணப்படும். மரவள்ளி செடியில் மாவுப்பூச்சிகள் தண்டுகள், அடிபாகம் மற்றும் இலைக்காம்பு இடுக்குகளில் காணப்படும். இலையின் மேற்பரப்பில், கரும்பூஞ்சானம் படர்ந்து காணப்படும். இதனை கட்டுப்படுத்த, களைச் செடிகளில் அடைக்கலம் புகுவதால், பயிர் சாகுபடி வயல்களை களையின்றி வைத்துக்கொள்ள வேண்டும். பாதிப்பு மிக குறைவாக இருந்தால், பாதிக்கப்பட்ட இலை தண்டுகளை, பாலித்தீன் பைகளில் சேகரித்து எரிக்க வேண்டும். அடிவெட்டு செய்தவுடன், 0.2 சதவீதம் புரோபனோபாஸ் மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீரில், இரண்டு மில்லி லிட்டர் வீதம், ஒரு ஏக்கருக்கு, 200 லிட்டர் மருந்தை கரைசல் செய்து, செடியின் அடிக்கட்டை தண்டு மற்றும் செடியை சுற்றியுள்ள மண் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.முதல் தெளிப்பில் இருந்து, 10 நாட்கள் கழித்து, ரோகர் மருந்தினை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு, மூன்று மி.லி., என்ற விகிதத்தில், வேப்ப எண்ணெயுடன் ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும். விவசாயிகள் அனைவரும் ஒட்டு மொத்தமாக மேற்கண்ட முறைகளை கையாண்டால், மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தி, கூடுதல் மகசூல் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## <u>நெல்லில் ஆணைக்கொம்பன் தாக்குதல் அதிகாரி எச்சரிக்கை</u>

நாமக்கல்:"நெல்லில் ஆணைக்கொம்பன் தாக்குதல் அதிகரித்துள்ளது. அவற்றை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கபிலர்மலை உதவி வேளாண் இயக்குனர் தங்ராஜூ தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:சம்பா பட்டத்தில், சாகுபடி செய்யப் பட்டுள்ள பிபிடி-5,204 ரக நெல்லில், ஆணைக்கொம்பன் ஈ, தாக்குதல் ஆங்காங்கே காணப்படுகிறது. இந்த ஈயினால், தாக்கப்பட்ட நெற்பயிர்,

இலை விரியாமல் வெங்காய இலை போன்று டியூப் போன்று அடித்தூரில் இருந்து வரும்.இளம் பச்சையாக இந்த பாதிக்கப்பட்ட தூர் தென்படும். அதில் இருந்து கதிர்கள் வராமல் விளைச்சல் பாதிக்கப்படும். இந்த தாக்குதல் கொசு போன்ற ஒரு ஈயினால் ஏற்படுகிறது. ஆணைக் கொம்பன் ஈ தாக்குதலை கட்டுப்படுத்த, பூச்சி மருந்துகளை வாங்கி, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.அதன்படி, இமிடா குளோபிரிட் 100 மி.லி, அல்லது, மானோகுரட்டோபாஸ் 36எஸ்.சி., 400 மி.லி., குளோர்பைரிபாஸ் 500 மி.லி., இவற்றில் ஏதாவது ஒரு பூச்சி மருந்தை வாங்கி, தண்ணீரில் கலந்து தெளித்து பூச்சி தாக்குதலை கட்டுப்பட்டுத்தலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## இலவச ஆடு பயனாளிகள்கிராமசபா மூலம் தேர்வு

ஈரோடு:ஈரோடு மாவட்டத்தில், ஜனவரி, ஃபிப்ரவரி மாதங்களில், இலவச ஆடு பெறும் பயனாளிகள், 676 நபர்கள், கிராமசபா மூலம் தேர்வு செய்யப்படும் பணி, நடந்து வருகிறது. கிராமப்புறங்களை சேர்ந்த, ஏழை மக்கள் பயனடையும், அரசின் இலவச ஆடு வழங்கம் திட்டம், கடந்த மூன்றாண்டுகளாக, தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னிமலை, பனியம்பள்ளியில் நடந்த கிராமசபா கூட்டத்தில், தேர்வுப்பணியை கால்நடைத்துறை இணை இயக்குனர் ஜெயராமன் நேரில் பங்கேற்று, பயனாளிகள் பட்டியலை ஆய்வு செய்தார்.கடந்த, 18ம் தேதி, ஐந்து பஞ்சாயத்துகள், டிச., 19ல் நான்கு பஞ்சாயத்துகள் என மொத்தம், ஒன்பது பஞ்சாயத்துகளை சேர்ந்த, 676 பயனாளிகளுக்கு, விலையில்லா ஆடுகள், கொள்முதல் செய்யப்பட்டு, ஜன., ஃபிப்., மாதங்களில் வழங்கி முடிக்கப்பட்டு விடும். இத்துடன், நடப்பு நிதியாண்டில், 4,838 பயனாளிகளுக்கு, இலவச ஆடுகள் வழங்கும் பணி முடிவடையும். இனி, அடுத்த நிதியாண்டுக்கான பயனாளிகள் தேர்வு செய்யப்படஉள்ளனர்.

## கொப்பரை தேங்காய் விலைகிலோவுக்கு ரூ.4 உயர்வு

கோபி:கோபி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், இந்த வாரம் கொப்பரை தேங்காய் பருப்பு, கிலோக்கு, நான்கு ரூபாய் அதிகரித்துள்ளது. கோபி சுற்று பகுதிகளில், தென்னை உற்பத்தி அதிகம் உள்ளது. தேங்காயை உடைத்து பருப்பாக விற்பதால், கூடுதல் லாபம் கிடைக்கும் என்பதால், விவசாயிகள் தேங்காய் பருப்பை, கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வருகின்றனர். கடந்த செப்டம்பரில், தேங்காய் பருப்பு கிலோ, 100 முதல் அதிகபட்சம் கிலோ, 120 ரூபாய் வரை விற்றதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தீபாவளி பண்டிகைக்கு பின், விலை படிப்படியாக சரிந்தது.கடந்த, மூன்று வாரங்களுக்கு முன்பு கிலோ, 70 ரூபாயாக குறைந்தது. இதனால், விவசாயிகள் போதிய விலை கிடைக்காமல் ஏமாற்றமடைந்தனர். கடந்த இரு வாரங்களாக தேங்காய் பருப்பின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.இந்த வாரம், கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், 128 மூட்டைகள் வரத்தானது. 87.25 முதல், 90.25 ரூபாய்க்கு விற்றன. ஒரே வாரத்தில், கிலோவுக்கு, ஏழு ரூபாய் அதிகரித்தது.நடப்பு வாரம், 197 மூட்டை வந்ததில், 88.09 முதல், 94.21 ரூபாய்க்கு விற்பனையாகின. கடந்த வாரத்தை காட்டிலும், நடப்பு வாரம் சராசரியாக, கிலோவுக்கு, நான்கு ரூபாய் அதிகரித்தது.தொடர்ந்து, விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஒரே நாளில், 7.50 லட்சத்துக்குவர்த்தகம்நடந்தது.

## காவிரி பாசன விவசாயிகள் நலச்சங்கம் நம்பிக்கைமக்கள் நலன் பாதுகாக்க அரசு செயல்பாடு

திருச்சி,:காவிரி நதிநீர் பிரச்னையில், தமிழக மக்களை பாதுகாக்கும் வகையில், தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது என, அரசு முதன்மை செயலாளர் கடிதம் மூலம், விவசாய சங்கத்துக்கு பதில் அளித்துள்ளார். கர்நாடகா மாநில அரசு, காவிரி

ஆற்றின் குறுக்கே, புதிதாக அணைகள் கட்டும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த திட்டத்தால், தமிழகத்தின் ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்தி, குடிநீர் ஆதாரங்கள் பாதிக்கும். திருச்சி, கரூர், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்களில், அரசியல் கட்சிகளின் விவசாய சங்கங்கள், அமைப்புகள் இணைந்து, கர்நாடகாவில் அணை கட்டும் திட்டத்துக்கு எதிராக போராட்டங்களை நடத்தின. இந்நிலையில், மேகதாதுவில் அணைக்கட்டும் கர்நாடகா அரசுக்கு எதிராக, தமிழக அரசு மக்கள் நலனை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து வருவதால், அரசின் முயற்சிகளுக்கு, விசாயிகள் சங்கங்கள், ஒருமித்த ஆதரவு வழங்க வேண்டும், என காவிரி பாசன விவசாயிகள் நலச்சங்கத்தின், செயல் தலைவர் மகாதானபுரம் ராஜாராம் கோரிக்கை விடுத்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:கர்நாடகா மாநில பாசனத்துறை அமைச்சர் பாட்டில், "அணைகட்டும் பணி உணர்வு பூர்வமாக உள்ளதால், சட்டசபையில் வெளிப்படையாக விவாதம் நடத்துவது சரியல்ல,' எனக்கூறியுள்ளார். மேலும், கர்நாடகா அரசு, வக்கீல் நாரிமனை நியமித்து, ஒப்புதல் பெற முயற்சிக்கிறது. இப்பிரச்னையில் எதிர்தரப்பு வாதத்தை முறியடிக்கும் வகையில், தமிழக அரசு செயல்பட வேண்டும். பொதுப்பணித்துறை வழங்கிய கடிதத்தின்படி, பிரதமர் மோடிக்கு, முதல்வர் கடிதம் எழுதியிருப்பது தெரிய வந்துள்ளது. காவிரியில் கர்நாடகா அரசு அணைகட்ட தடை விதிக்க வேண்டும் என்றும், காவிரி மேலாண்மை வாரியம் வரும் வரை மற்றும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் முடிவுக்கு வரும் வரை, தற்பாதைய நிலையே தொடர வேண்டும், என்று ஆணை வழங்க உச்சநீதி மன்றத்தில், ஒரு இடைக்கால மனுவை, தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. காவிரி நதிநீர் தொடர்பான பிரச்னையில், தமிழக மக்களின் நலனை பாதுகாக்கும் வகையில், தமிழக அரசு, அனைத்து நடவடிக்கை எடுத்து வருகிறது, என்று கடிதம் மூலமாக,

அரசு முதன்மை செயலாளர் பழனியப்பன் தெரிவித்துள்ளார்.எனவே, தொடர் முயற்சிக்கு, தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளின் விவசாய சங்கங்கள், அமைப்புகள் ஆதரவு தரவேண்டும், என தெரிவிதுள்ளார்.

**<u>சின்ன வெங்காயம் 40 டன் ஏலம்</u>**

பெரம்பலூர்,:செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் நடந்த திறந்த முறை ஏலத்தில், துறையூர், எரகுடி, டால்மியா, லாடபுரம், எசனை உள்ளிட்ட பலவேறு கிராமங்களை சேர்ந்த, 169 விவசாயிகள், தங்களது சின்ன வெங்காயத்தை திறந்த முறை ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதில், கரூர், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், சத்தியமங்கலம், திருச்சி, அரியலூர், பெரம்பலூரை சேர்ந்த, 26 வியாபாரிகள், 720 மூட்டை (40,548 கிலோ) வெங்காயத்தை ஏலத்தில் எடுத்தனர். அதிகபட்சமாக ஒரு கிலோ சின்ன வெங்காயம் 38.50 ரூபாய்க்கும், சராசரியாக கிலோ, 22 ரூபாய்க்கும் என மொத்தம், ஒன்பது லட்சத்து, ஏழாயிரத்து, 918 ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனையானது.

**<u>உழவர் பாதுகாப்பு திட்டநலத்திட்ட உதவி வழங்கல்</u>**

அரியலூர்,:தமிழக அரசின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில், அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுகா அலுவலகத்தில் நடந்த சிறப்பு நலத்திட்ட உதவி வழங்கும் விழாவுக்கு, தாசில்தார் ரவி தலைமை வகித்தார். சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் அமுதா வரவேற்றார். தலைமையிடத்து துணை தாசில்தார் குமரையா முன்னிலை வகித்தார்.உழவர் பாதுகாப்பு திட்டத்தின் மூலம், இயற்கை மரணம் மறறும் ஈமச்சடங்கு உதவி தொகை, விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவி தொகை, திருமண உதவி தொகை உள்பட, 113 பயனாளிகளுக்கு, 13 லட்சத்து, 40 ஆயிரத்து, 500 ரூபாய்க்கான காசோலைகளை, உடையார்பாளையம் ஆர்.டி.ஓ., கருணாகரன் வழங்கி பேசினார். நிகழ்ச்சியில் செந்துறை தாலுகா

வழங்கல் அலுவலர் தேன்மொழி, ஆர்.ஐ., சீதாலெட்சுமி, வி.ஏ.ஓ., கணேசன் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**<u>பூவரசம் குறித்து விழிப்புணர்வுஇலவச கன்று வழங்க ஏற்பாடு</u>**

திண்டுக்கல்:தேக்கு மரத்திற்கு இணையாக கதவு, ஜன்னலுக்கு பூவரச மரத்தின் தடிகள் பயன்படுத்தப்படுவதால் அவற்றின் கன்றுகளை இலவசமாக வழங்கி ஊக்குவிப்பதற்கான முயற்சியை வனத்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.திண்டுக்கல் சிறுமலை வனச் சரக அலுவலர் சரவணன் கூறியதாவது:"ஆக்சிஜனை அதிகம் வெளியிடும் சக்தி பூவரச மரத்தில் உள்ளது. ஏழைகளின் தேக்கு என அழைக்கப்படுகிறது. எல்லா காலங்களிலும் பசுமையாகவே காணப்படும். வீடுகளின் ஓரங்களில் இவற்றை வளர்க்கலாம். தெற்கு ஆற்காடு பகுதியில் மர சாமான்கள் செய்வதற்கு அதிகமாக இவ்வகை மரங்களின் தடிகளைத்தான் பயன்படுத்துகின்றனர். குறைந்தளவு தண்ணீரை பயன்படுத்தி வளரும் தன்மை பெற்றது. மரத்திலிருந்து உதிரும் இலைகள் மண்ணை வளப்படுத்தும். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பூவரச மரம் இருக்க வேண்டும் என்பதற்காக இதன் கன்றுகளை இலவசமாக வழங்க முடிவு செய்துள்ளோம்,' என்றார்.

**<u>விளைந்த நெல்லை பாதுகாக்க சேலை கட்டும் விவசாயிகள்</u>**

சிவகங்கை:சிவகங்கையில் வயல்களுக்கு சேலை கட்டி பறவை களிடமிருந்து நெல்லை பாதுகாக்கும் யுக்திகளை விவசாயிகள் கடைபிடிக்கின்றனர். வறட்சியான மாவட்டமான சிவகங்கையில் ஆண்டுதோறும் மழை காலங்களில் கிடைக்கும் நீரை வைத்து தான் விவசாயிகள் மானாவாரியாக நெல் உள்ளிட்டவற்றை பயிரிட்டு வருகின்றனர். கடந்த 3 ஆண்டுகளாக கடும் வறட்சி நிலவியதால், நிலத்தடி நீர்மட்டம் பாதித்து, விவசாயமே இம்மாவட்டத்தில் கேள்வி குறியாக இருந்தது. இந்த ஆண்டு விவசாயிகளுக்கு வாழ்வுதரும் வகையில் நல்ல மழை பெய்தது. பெரியாறு, வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. கிணறுகளில் நீர்மட்டமும்

உயர்ந்தது. 80 ஆயிரம் ஏக்கர்: மாவட்ட அளவில் 80 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் நெல் நடவு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இது தவிர, காய்கறி, பிற பயிர் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளனர். விவசாய நிலங்களில் நெல் விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. நெல்லை அறுவடை செய்து, தை பொங்கல் அன்று சூரிய பகவானுக்கு படைக்க விவசாயிகள் தயாராக உள்ளனர். குவியும் பறவைகள்: தற்போது பெரும்பாலான விவசாய நிலங்களில் நெல் விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ளது. அதே நேரம் மழையால் கண்மாய், ஊரணிகளில் நீர்மட்டம் உயர்ந்து கொக்கு, நாரை உள்ளிட்ட பறவைகளின் வரத்தும் அதிகரித்துள்ளன. கொக்கு, நாரை, மயில் உள்ளிட்ட பறவைகள் விளைந்த நெற்பயிர்களை "வேட்டையாட' மாலையில் வயல்களில் கூடுகின்றன. சேலை கட்டும் யுக்தி: பறவைகளையும் வேட்டையாடக்கூடாது. அதே நேரம், நிலத்தில் பாடுபட்டு வளர்த்த நெல் மணிகளையும் நெற்களத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற ஆவலில், அறுவடைக்கு தயாராக உள்ள நெல்லை பாதுகாக்க, விவசாயிகள் வயல்களை சுற்றி சேலை கட்டும் யுக்தியை கடைபிடித்துள்ளனர். விவசாயிகள் கூறும்போது; நெற்பயிர்களை முழுமையாக அறுவடை செய்யும் ஆசையில் உள்ளோம்.விளைந்த நெல்லை சாப்பிடுவதற்காக பறவைகள் வயல்களில் முகாமிடுகின்றன. பறவையிடமிருந்து நெல்லை பாதுகாக்க வயலில் சேலை கட்டுகிறோம். பறவைகள் உட்காரும் போது காற்றின் மூலம் சேலையில் இருந்து "படபடவென' சத்தம் வரும். இந்த சத்தத்தை கேட்டு பறவைகள் வயலில் உட்காராமல் பறந்து விடும், என்றனர்.

**<u>தேனி மாவட்டத்தில் தொடர் மழைஅணைகளுக்கு மீண்டும் நீர் வரத்து</u>**

தேனி:தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழை காரணமாக அணைகளுக்கு மீண்டும் நீர் வரத்து தொடங்கி உள்ளது. தேனி மாவட்டத்தில் 15 நாள் இடைவெளிக்கு பிறகு நேற்று முன்தினம்

இரவு மீண்டும் மழை பெய்தது. பெரியகுளத்தில் 5 மி.மீ., வைகை அணையில் 3.60 மி.மீ., மஞ்சளாறு அணையில் 1 மி.மீ., ஆண்டிபட்டியில் 10.60 மி.மீ., அரண்மனைப்புதூரில் 3 மி.மீ., வீரபாண்டியில் 10 மி.மீ., தேக்கடியில் 3 மி.மீ., பெரியாறில் 6 மி.மீ., கூடலூரில் 7 மி.மீ., போடியில் 1 மி.மீ., உத்தமபாளையத்தில் 8 மி.மீ., சோத்துப்பாறையில் 2 மி.மீ., மழை பெய்தது.சிறிய இடைவெளிக்கு பிறகு பெய்த மழையால் அணைகளுக்கு மீண்டும் நீர்வரத்து தொடங்கி உள்ளது. வைகை அணைக்கு விநாடிக்கு 1477 கனஅடி நீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து 1860 கனஅடி நீர் வெளியேறி வருகிறது. அணையின் நீர் மட்டம் 31.63 அடியாக உள்ளது. முல்லை பெரியாறு அணைக்கு 839 கனஅடி நீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து 1644 கனஅடி நீர் வெளியேற்றப் பட்டு வருகிறது. நீர் மட்டம் 133.10 அடியாக உள்ளது.மஞ்சளாறு அணைக்கு 31 கனஅடி நீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து 80 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நீர் மட்டம் 45.80 கனஅடியாக உள்ளது. சோத்துப்பாறை அணைக்கு நீர் வரத்து 30 கனஅடியாகவும், வெளியேற்றம் 30 கனஅடியாகவும் உள்ளது. நீர் மட்டம் 100 அடியாக உள்ளது.சண்முகாநதி அணைக்கு நீர் வரத்து 2 கனஅடியாகவும், வெளியேற்றம் 5 கனஅடியாகவும் உள்ளது. நீர் மட்டம் 41.30 அடியாக உள்ளது. மாவட்டத்தில் நேற்று இரவும் தொடர்ந்து மழை பெய்தது.

## <u>குமரியில் 395 மி.மீ. மழை அதிகம்</u>

நாகர்கோவில்:குமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டை விடவும், சராசரி மழை அளவையும் விட இந்த ஆண்டு கூடுதல் மழை பதிவாகியுள்ளது. குமரி மாவட்டத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை என இரண்டு வகையான பருவமழை கிடைக்கிறது. கடந்த ஆண்டில் தென்மேற்கு பருவ மழை ஓரளவு கிடைத்தது. வடகிழக்கு பருவமழை

சரியாக கிடைக்கவில்லை. ஆனால் இந்த ஆண்டு ஜனவரி, ஏப்ரல், மே மாதங்களில் தென்மேற்கு பருவ மழை கொட்டி தீர்த்தது. செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவமழை பலமாக நீண்டு பெய்தது. இதனால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் கணிசமான தண்ணீர் உள்ளது. முக்கடல், மாம்பழத்தாறு அணைகள் நிரம்பி வழிகிறது. கடந்த ஆண்டு மாவட்டத்தில் 1132.21 மி.மீ. மழை பதிவானது. இந்த ஆண்டு இதுவரை 1527.15 மி.மீ. மழை பதிவாகி யுள்ளது. இது கடந்த ஆண்டை விட 395 மி.மீ. அதிகமாகும். குமரி மாவட்டத்தின் சராசரி பருவமழை 1443 மி.மீ. என கணக்கிடப் பட்டுள்ளது. அந்த வகையிலும் இந்த ஆண்டு 84.15 மி.மீ. மழை கூடுதல் பெய்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இன்று விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் கலெக்டர் சண்முகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது : காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகளின் குறை தீர்க்கும் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இதில் வேளாண்மை, சார்பு துறை அதிகாரி மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். எனவே மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**புகையான் தாக்குதலில் இருந்து நெற்பயிரை பாதுகாக்க கண்காணிப்பு குழு**

திருவள்ளூர், : மீஞ்சூர், கும்மிடிப்பூண்டி, சோழவரம் ஆகிய ஒன்றியங்களில் அடங்கிய பல ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்களில் நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. இந்த பயிர்களில் பெரும் பகுதி

புகையான் நோய் தாக்கி சேதமானது. இந்த நெற்பயிர்களை கலெக்டர் வீரராகவ ராவ் நேற்று முன்தினம் ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறுகையில், திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 52 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எல்லாபுரம் வட்டாரத்தில் ஒரு சில கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள், திருப்பாலைவனம் பிர்காவைச் சேர்ந்த மெதூர், ஆவூர், வேப்பம்பேடு, பனப்பாக்கம், கோளுர், கரிக்கப்பட்டு, ஜனப்பன்சத்திரம், பஞ்சட்டி, சயனாவரம், கச்சூர், மாதாவரம், கிருஷ்ணாவரம் ஆகிய பகுதி களில் சாகுபடி செய்த நெற்பயிர்கள் ஆய்வு செய்யப்பட்டது. வேளாண்மை துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பூச்சிநோய் நிபுணர்களை கொண்டு கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு, பயிர் பாதுகாப்பு முறைகள் கையாளப்பட்டு வருகிறது. அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் காப்பீடு வாயிலாக உரிய நிவாரணம் பெற்று தர போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேளாண்துறை அலுவலர்களுக்கு கலெக்டர் வீரராகவராவ் உத்தரவிட்டார்.

## <u>1400 மூட்டை பருத்தி ரூ22 லட்சத்துக்கு ஏலம்</u>

நாமக்கல், :நாமக்கல்லில் நடந்த ஏலத்தில் 1400 மூட்டை பருத்தி, ரூ22 லட்சத்திற்கு விற்பனையானது. நாமக்கல் வேளாண்மை உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில், நாமக்கல் மற்றும் சுற்றுப்புற ஊர்களை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் மொத்தம் 1400 மூட்டை பருத்தி விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். ஏலத்தில், திருச்செங்கோடு, ஈரோடு, திண்டுக்கல் உள்ளிட்ட ஊர்களை சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்துகொண்டனர். மொத்தம் ரூ22 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. ஆர்சிஎச் ரக பருத்தி ஒரு குவிண்டால் ரூ 4,167 முதல்

ரூ4,444 வரையும், டிசிஎச் ரகம் ஒரு குவிண்டால் ரூ4,580 முதல் ரூ4,806 வரையும் ஏலம் போனது.

## வாழையை தாக்கும் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்துவது எப்படி? தோட்டகலை அதிகாரி விளக்கம்

தோகைமலை, : வாழையை தாக்கும் இலைப்புள்ளி நோயை கட்டுபடுத்துவது குறித்து தோகைமலை தோட்டகலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், வாழையை பல நோய்கள் தாக்கினாலும் இலைப் புள்ளி நோய் அல்லது மட்டைக்காய்ச்சல் நோய் மிக முக்கியமானது. இதனை கட்டுப்படுத்த கீழ் காணும் முறைகளில் நோயின் அறிகுறிகளை அறி ந்து கொண்டு உரிய தடு ப்பு நடவடிக்கை எடுத்திட வேண்டும். மட்டைக்காய்ச்சல் அல்லது இலைப்புள்ளி நோய் மைக்கோஸ்பீரெல்லா என்ற ஒரு வித பூஞ் சானத்தால் ஏற்படுகிறது. அறிகுறிகள்: முதலில் இலையின் மேற்பகுதியில் வெளிரிய மஞ்சள் அல்லது பச்சை கலந்த மஞ்சள் நிறத் தில் சிறு கோடுகள் இலை நரம்புகளுக்கு இணை யாக தோன்றும். இந்த கோடுகள் நாளடைவில் வளர்ந்து நீள்வட்ட வடிவத்தில் கரும் பழுப்பு நிறமாக மாறும். இது போன்ற நீள் வட்ட முக்கிய புள்ளிகள் ஒன்றொடொன்று இணை ந்து பெரிய புள்ளியாக மாறி இலைகள் காயத்தொடங் கும். இவ்வாறு இலைகள் முழுவதும் காய்ந்து சருகுகலாக மாறி விடுவதால் இந்த நோயினை சருகு நோய் அல்லது மட்டை காய்ச்சல் நோய் என்பர். நோய் பரவும் விதம்: இந்த நோயை உண்டு பண்ணக்கூடிய பூஞ்சான வித்துகள் மழை மற்றும் பனி காலங்களில் அதிமாக உற்பத்தி செய்யப்பட்டு அவை மழை, பனி துளிகள் மற்றும் காற்று ஆகியவற்று மூலமாக பக்கத்தில் உள்ள இலை வாழை மரம் மற்றும் பக்கத்து தோட்டங்களுக்கும் பரவுகின்றன. இந்த நோய் வாழை தோட்டங்களில் களைகள் அதிக மாக இருந்தாலும் வடிகால் வசதி இல்லாமல் இருந் தாலும், பனி மற்றும் மழை காலங்களிலும் அதிகமாக பரவுகின்றன. இந்த நோய் ஐப்பசி முதல் தை மாதம் வரை அதிக அளவில் காணப் படும். மேலும் ரஸ் தாளி, நேந்திரன், பூவன், பச்ச நாடன் ஆகிய

வாழை ரகங் களை அதிக அளவில் இந்த நோய் தாக்குகிறது. நோய் கட்டுப்பாடு: வாழை தோட்டங்களில் நல்ல வடிகால் வசதி செய் திட வேண்டும். தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்; வாழை தோட்டங்களில் களைகள் இல்லாமல் இருக்க வேண் டும். வாழை கன்றுகளை சரியான இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நெருக்கி நடவு செய்வதை தவிர்க்க வேண் டும். காய்ந்த இலைகளையும், இலை புள் ளிகள் அதிக அளவில் காண ப்படும் இலை களை யும் நிலத்தில் போடா மல் வெளியே கொண்டு சென்று தீ வைத்து அழித்திட வேண் டும். மருந்து கரைசலை இலைகளின் மேல் மற்றும் கீழ் பாகம் முழுவதும் தெளிக்க வேண்டும். வாழை விவசாயிகள், இந்த முறைகளை கடைப்பிடித்து இலைப் புள்ளி, மட்டை காய்ச்சல் நோயினை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என்றார்.

## <u>பெரம்பலூரில் தொடர்மழை நடப்பாண்டில் 847.66 மி.மீ பதிவு</u>

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக தொடர்மழை பெய்து வருகிறது. ஜன-1ம் தேதி முதல் டிச. 18 வரை 847.66 மிமீ பதிவானது. பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த மாதம் 11,12,13,14 ஆகியத் தேதிகளில் தொடர் மழை பெய்தது. இதனால் அரும்பாவூர் பெரிய ஏரி, சித்தேரி, வெங் கலம் பெரிய ஏரி, பாண்டகப்பாடி, வெண் பாவூர், வடக்கலூர் ஏரிகள் நிரம்பி வழிந்தன. அதேபோல கடந்த சில தினங்களாக பெரம்பலூரில் நல்லமழை பெய்துவருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 16ம் தேதி 42.5 மிமீ மழையும், 17ம் தேதி 30 மிமீ மழையும் பெய்துள்ளது. நேற்று காலை முதல் மாலை வரை மட்டும் 21.30 மிமீ மழை பெய்துள்ளது. குறிப்பாக, நேற்று அதிகாலை 4 மணிக்குப் பெய்யத் தொடங்கிய மழை 9 மணி வரை பெய்து கொண்டிருந்தது. பிறகு பகல் 11 மணிக்குத் தொடர்ந்த மழை 12.30 மணிவரை பெய்தது. மதியமும் மழை பெய்தது. இதனால் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டது. தொடர் மழை பெய்தும்

மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டிலுள்ள 73 ஏரிகளில் கடந்த மாதம் 6 ஏரிகள் மட்டுமே நிரம்பி வழிந்தன. 7 ஏரிகள் மட்டுமே 50 முதல் 75 சதவீதக் கொள்ளளவை எட்டியிருந்தன. 20க்கும் மேற்பட்ட ஏரிகளில் 10 சதவீதம் அளவிற்குக்கூட தண்ணீர் நிரம்பவில்லை. இந்நிலையில் சில தினங்களாகப் பெய்துவரும் மழை யால் வயல்களில் தண்ணீர் தேங்கி பயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அள வுக்கு மழை பெய்துள்ளது. குறிப்பாக வேப்பந்தட்டை, வேப்பூர், பெரம்பலூர் தாலுகா பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி, மக்கச் சோள பயிர் கள் தண்ணீரில் நிற்கின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழையளவு பெய்துள்ள போதும், நிலத் தடி நீர்மட்டம் உயராதது விவசாயிகள் மத்தியில் வேத னையை ஏற்படுத்தியுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 908 மிமீ . இதில் 2014 ஜனவரி 1ம்தேதி முதல் டிசம்பர் மாதம் 18ம் தேதிவரை தழுதாழை பகுதியில் 947.50 மிமீ, பெரம்பலூர் பகுதியில் 942.50 மிமீ, வேப்பந்தட்டை பகுதியில் 932.30 மிமீ, செட்டிக்குளம் பகுதியில் 779 மிமீ, பாடாலூர் பகுதியில் 637 மிமீ என மொத்தம் 4238.3 மிமீ மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் சராசரியாக 847 மிமீ மழை பெய்துள்ளது. இது ஆண்டு சராசரியைக் காட் டிலும் 61 மிமீ குறைவாகும். இன்னும் 11 நாட்கள் பாக்கியுள்ள நிலை யில் தொடர்மழை நீடித்தால் சராசரியை எட்ட முடியும். ஆலத்தூர்: பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா பகுதிகளில் உள்ள கிராமங்களான பாடாலூர், இரூர், ஆலத்தூர், நாட்டார்மங்கலம், செட்டிக்குளம், மாவலிங்கை, கொளக்காநத்தம், காரை, தெரணி, நக்கசேலம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களிலும் தொடர்ந்து நேற்றும் காலை முதலே மழை பெய்தது. பகல் முழுவதும் விட்டு விட்டு மழை பெய்து கொண்டிருந்ததால், விவசாயிகள் நிலங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஆடு, மாடுகளை காட்டிற்கு ஓட்டிச்செல்ல முடியாமலும், தீவனங்கள் எடுத்து

வர முடியாமலும் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாயினர். பள்ளி மாணவ, மாணவிகளும் பள்ளிக்கு சென்றுவர மிகவும் சிரமப்பட்டனர். மழையில் நனைந்தபடியும், குடை பிடித்தபடியும் பள் ளிக்கு சென்று வந்தனர். கடைவீதி பொதுமக்கள் நடமாட்டம் இன்றி வெறிச் சோடி காணப்பட்டது. ஆலத்தூர் ஒன்றிய கிராமப் பகுதிகளில் தற்போது வெங்காயம் அறுவடை செய்யும் பணி நடைபெற்று வருவதால், மழை காரணமாக வெங்காயம் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயப் பணிகளும் பாதிக்கப்பட்டது.

## <u>புதுகையில் 2ம் நாளாக மழை ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி</u>

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் 2வது நாளாக நேற்றும் பலத்த மழை பெய்தது. வறண்டுக் கிடந்த ஏரி, குளங்களுக்கு இம்மழையால் தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்த புதுக் கோட்டை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு பெய்யத் துவங்கிய மழை அதிகாலை வரை நீடித்தது. நேற்றும் விட்டுவிட்டு மழை பெய்தது. இதனால் சாலைகளின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் போல் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வாகன ஓட்டிகள் சிரமத்துடன் வாகனங் களை ஓட்டிச் சென்றனர். இதே போல், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் 2வது நாளாக நேற்றும் பரவலாக மழை பெய்தது. தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தற்போது மழை பெய்து வருவதால் பல்வேறு பகுதிகளில் உள்ள வறண்டுக் கிடந்த ஏரி மற்றும் குளங்களில் தற்போது தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளது. திருமயம்: இதே போல் திருமயம், அரிமளம் ஒன்றியப் பகுதிகளில் இரவு, பகலாக பெய்த பலத்த மழையால் பூமி குளிர்ந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த ஆண்டு குறுகிய கால பயிர்களை நட்டுவைத்த விவசாயிகள்

இதுகுறித்து கூறும்போது. எங்களை போன்ற விவசாயிகளுக்கு மழை பற்றாக்குறை என்று நினைத்திருந்த நேரத்தில் கடந்த சில மாதங்களாக மழை விட்டுவிட்டு பெய்தாலும் கடந்த 2 நாட்களாக தொடர்ந்து இரவு பகலாக நல்ல மழை பெய்துள்ளது. குறுகிய கால பயிர்களுக்கு இது மிகுந்த பலனளிக்கும். புன் செய் காட்டுப் பயிர்களான நிலக்கடலை துவரை மொச்சை உளுந்து போன்ற பயிர்களுக்கு இம்மழை விளைச்சலை கொடுக்கும். எனவே, இது போதுமான மழையாகும். இதனால் குறித்த காலத்தில் புன் செய் காட்டு பயிர்கள் நல்ல விளைச்சலைத் தரும் என்றனர். மழைஅளவு புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): ஆலங்குடி- 28.30, அறந்தாங்கி- 20, கந்தர்வக்கோட்டை- 24, கீரனூர் 17, புதுக்கோட்டை- 21, அரிமளம்- 25.20, திருமயம்- 19.80, விராலிமலை- 10.20, இலுப்பூர்- 4, உடையாளிப்பட்டி- 38, பெருங்களூர்- 17, கறம்பக்குடி- 5, மழையூர் 5, ஆயிங்குடி- 20.40, நாகுடி- 6, கட்டுமாவடி- 14, ஆவுடையார்கோவில்- 24, ஆதனக்கோட்டை- 15, மீமிசல்- 30.20, மணமேல்குடி 67, அன்னவாசல் 10, குடுமியான்மலை 26, பொன்னமராவதி 14.8, காரையூர் 8.60, கீழாநிலை 60 என மொத்தம் மாவட்டத்தில் 529.78 மி.மீ மழை பதிவாகி உள்ளது. இது சராசரியாக மாவட்டத்தில் 21.19 மி.மீ. மழை பெய்துள்ளது.

## உணவு பாதுகாப்பு குழுமத் திட்டத்தின் கீழ் 10 ஆண்டுக்குள் வெளியிடப்பட்ட நெல் ரகங்களுக்கு ரூ.1000 மானியம் பயிற்சி முகாமில் தகவல்

புதுக்கோட்டை, : தேசிய உணவு பாதுகாப்பு குழுமத் திட்டத்தின் கீழ், 10 ஆண்டுகளுக்குள் வெளியிடப்பட்ட நெல் ரகங்களுக்கு குவிண்டாலுக்கு ரூ.ஆயிரம் வீதம் மானியம் வழங்கப் படுகிறது. புதுக்கோட்டை மாவட்டம், தாயினிப்பட்டி கிராமத்தில் குன்றாண்டார்கோவில் வட்டார விவசாயிகளுக்கு விதை கிராமத் திட்டத்தின் கீழ் உயிரி உரம் குறித்து

செயல் விளக்க பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமுக்கு புதுக்கோட்டை வேளாண் துணை இயக்குநர் சதானந்தம் தலைமை வகித்துப் பேசியதாவது: தேசிய உணவு பாதுகாப்பு குழுமத் திட்டத்தின் கீழ், 10 ஆண்டுகளுக்குள் வெளியிடப்பட்ட ரகங்களுக்கு குவிண்டாலுக்கு ரூ.ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. நெல் தொகுப்பு செயல் விளக்கத்துக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.7,500 வீதம் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. மேலும் நெல் நுண்சத்து , பயிர் பாதுகாப்பு மருந்துகள் , களைக்கொல்லி மற்றும் தெளிப்பான்கள் ஆகியன மானியத்தில் வழங்கபட்டு வருகின்றன. எனவே விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கேற்று சாகுபடியை அதிக அளவில் பெருக்க வேண்டும் என்று கேட்டுகொண்டார். தரமான விதை உற்பத்திக்கான நவீன தொழில்நுட்ப முறை குறித்து விதை சான்று அலுவலர் பாண்டியன் விளக்கினார். இதைத் தொடர்ந்து, புதுக்கோட்டை வேளாண் அலுவலர் ஜெகதீஸ்வரி மத்திய அரசு திட்டப் பணிகள் குறித்தும், வேளாண் அலுவலர் லூர்து ராயப்பன் சிறுதானிய பயிர்கள் சாகுபடியின் அவசியம் குறித்தும், துணை வேளாண் அலுவலர் ஆதவா, உயிரி உரங்களின் பயன்பாடு குறித்தும் எடுத்துரைத்து செயல் விளக்கம் அளித்தனர். முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு உயிரி உரங்கள் மற்றும் இனக்கவர்ச்சி பொறி ஆகியன இடுப் பொருட்களாக வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் நிஷா, பால்சாமி மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக, வேளாண் உதவி இயக்குநர் சங்கரலட்சுமி வரவேற்றுப் பேசுகையில், விதைப் பண்ணை அமைத்து தரமான விதை உற்பத்தி செய்வதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார். முடிவில் வேளாண் உதவி அலுவலர் சத்தியசீலன் நன்றி கூறினார்.

## அமில நிலங்களையும் சீர்திருத்தி விவசாயத்திற்கு பயன்படுத்தலாம் வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை

நாகர்கோவில், : அமில நிலங்களையும் சீர்திருத்தி விவசாயத்திற்கு பயன்படுத்தலாம் என்று ராஜாக்கமங்கலம் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை உதவி இயக்குநர் வாணி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: குமரி மாவட்டத்தில் மலைச்சரிவு மிகுந்த பகுதிகளிலும், மழை அளவு அதிகமுள்ள பகுதி களிலும், பூமிக்கடியில் அமிலத்தன்மை உடைய பாறைகள் உள்ள இடங்களிலும் மண் ணில் உள்ள சுண்ணாம்பு நாளடைவில் நிலத்தில் இருந்து வெளியேறி அமிலத்தன்மை மிகுந்துவிடுவதால் அந்த நிலம் அமிலத்தன்மைபெற்று விடுகிறது. நல்ல நிலம் என்பது கால்சியம் இணைந்த களித்துகள்கள் கொண்டது. ஆனால் அமில நிலத்தில் நைட்ரஜன் இணைந்த களித்துகள்கள் அதிகம் இருப்பதால் மண்ணின் கார அமில நிலை (பிஎச்) ஆறுக்கு குறைவாக காணப்படுகிறது. அமில நிலத்தில் பெரும் பிரச்சனை பாஸ் பரஸ் கிட்டாத நிலையாகும். இரும்பு மற்றும் அலுமினியம் ஆகியவை அமில நிலையில் கரைந்து பாஸ்பேட்டுடன் இணைந்து இரும்பு பாஸ்பேட் ஆகவும், அலுமினியம் பாஸ்பேட் ஆகவும் மாறிவிடுகின்றன. இந்தநிலையில் உள்ள பாஸ்பேட் களை பயிர்கள் எடுத்துக்கொள்ள இய லாது. அலுமினியம், சிலிக்கேட் டுடன் பொட்டாஷியம் சேர்த்து பொட்டாசியம் சிலிக்கேட் ஆக பயிர்கள் எடுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு கிட்டா நிலையை அடைந்து விடுகிறது. துத்தநாகம், மாங்கனீசு, இரும்பு, அலுமினியம் ஆகியவை அமில நிலத்தின் அபரிமிதமான நிலையில் உள்ள தால் அவற்றின் நச்சுத்தன்மை அதிகமாகி பயிருக்கு தீங்கு விளைவிக்கின்றன. கால்சியம், மக்னீஷியம், மாலிப்டீனம், ஆகியவை அமில நிலையில் பற்றாக் குறை நிலைமை அடைவ தால் பயிர்களுக்கு கிடைக் காத நிலை ஏற்படுகிறது. வேர் முண்டுகளில் வாழும் ரைசோபியங்கள் அமிலத்தன்மை உள்ள நிலங்களில் செவ்வனே செயல்படாது. அமில நிலங்களை சீர்திருத்தி மேம்படுத்த மண் ஆய்வு பரிந்துரையின் அளவுப்படி சுண்ணாம்புக்கலை

தூளாக்கி அல் லது சுட்ட சுண்ணாம்பு அல்லது நீற்றிய சுண் ணாம்போ இட வேண்டும். பின்னர் உலர்ந்த நிலையில் உழுது நன்றாக புழுதியாக்க வேண்டும். நீற்றிய சுண்ணாம்பில் சிறிது நீர் சேர்த்து நீர்த்திய பின்னர் வெப் பம் தணிய ஆற் றிட வேண்டும். இதனை நிலத் தில் சீராக பரப்பிட வேண் டும். இதனை பயிர் செய்வதற்கு 15 நாட்களுக்கு முன் பாக செய்திட வேண் டும். சுண் ணாம்பு இட்ட மறுநாள் நஞ்சையில் நீர் விட்டு தொழியாக்க வேண் டும். தோட்டம் புன்சையில் நீர் விடாமல் உழுதுவிட வேண் டும். முக்கியமாக கவனிக்க வேண்டியது நீரை வடியவிடக் கூடாது. விவசாயிகள் தாங்கள் பயிர் செய்யும் நிலத்தில் மண் மாதிரிகள் சேகரித்து நிலம் மற்றும் பயிர் விபரங்களுடன் மண் பரிசோதனை நிலையத்தில் ஆய்வு செய்து மண்ணின் அமில மற்றும் களர் நிலங்களையும் அவற்றிற்கான சீர்திருத்த விபரங் கள் மற்றும் உர பரிந்துரை களையும் அறிந்துகொள்ளலாம். இதற்கு ஆய்வு கட்டணமாக பேரூட்டங்கள் ஆய்வு செய்திட ரூ.10ம், நுண்ணூட்டங்கள் ஆய்வு செய்திட ரூ.10ம் செலுத்த வேண்டும். அவ்வாறு ஆய்வு செய்வதில் மண் அமிலத்தன்மை உடைய தாக இருப்பின் மேற்கூறியவாறு விவசாயிகள் அமில நிலங்களை சீர்திருத்தி நன்றாக மேம்படுத்தி அதிக மகசூல் பெற்றிடலாம். இவ்வாறு செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பது குறித்து பெண்களுக்கு பயிற்சி</u>**



காய்கறி தோட்டம் அமைப்பது குறித்து வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர்கள் பெண்களுக்கு விளக்கி கூறிய போது எடுத்த படம்.

பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பது குறித்து பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பெண்களுக்குபயிற்சி

பாப்பாரப்பட்டியில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் தர்மபுரி மாவட்டத்தின் ஊரக பகுதிகளில் ஊட்டச்சத்தை உறுதி செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்தை உறுதி செய்யும் வகை யில் வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பது குறித்த பெண்களுக்கான பயிற்சி பென்னாகரத்தில் நடத்தப்பட்டது. இந்த பயிற்சிக்கு பாப்பாரப் பட்டி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் தமிழ்செல்வன் தலைமை தாங்கினார். உதவி பேராசிரியர்கள் சங்கீதா, சண்முகம் ஆகியோர் கலந்துகொண்டு இந்த திட்டத்தின் முக்கியத்துவம், பென்னாகரம் வட்டாரத்தில் செயல்படுத்துவதன் நோக்கம் குறித்து விளக்கி கூறினர். மேலும் காய்கறி தோட்டத்தில் மண் மற்றும் உர மேலாண்மை, பஞ்சகாவியா பயன்பாடு, உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து பயிற்சி அளித்தனர். முன்னதாக சூடோமோனாஸ் இலை வழித்தெளிப்பு, இனக்கவர்ச்சி பொறி பயன்பாடு, டிரைக்கோகிராமா முட்டை, ஒட்டுண்ணி பயன்பாடு குறித்து பெண்களுக்கு விளக்கி கூறினர்.

வீட்டுகாய்கறிதோட்டம்

இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் தமிழ்செல்வன் கூறுகையில், தனிமனிதனின் சரிவிகித உணவில் காய்கறி மற்றும் பழங்களுக்கு முக்கிய பங்குள்ளது. ஒரு நாளைக்கு ஒருவருக்கு 90 கிராம் பழங்கள் மற்றும் 250 கிராம் காய்கள் கட்டாயம் இடம் பெற வேண்டும். ஆனால் சராசரியாக 46 கிராம் பழங்கள் மற்றும் 160 கிராம் காய்கள் மட்டுமே கிடைக்கிறது. ஊரக பகுதிகளில் இந்த அளவு மேலும் குறைவாகும். வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பதன் மூலம் ஒரு கிராமப்புற குடும்பத்தின் காய்கறி தேவைகளை பூர்த்தி செய்ய இயலும். 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒரு சென்டில் காய்கறித்தோட்டம் இருந்தால் போதுமானது. மேலும் நமக்கு தேவையான காய்கறிகளை

நாமே உற்பத்தி செய்வதன் மூலம் ரசாயனமற்ற இயற்கை முறையில் விளைந்த காய்கறிகளை எந்தவித சத்து குறைபாடும் ஏற்படாமல் பயன்படுத்த வாய்ப்பு உண்டாகிறது. எனவே விவசாயிகள், பெண்கள் வீடுகளில் காய்கறி, பழங்கள் தோட்டம் அமைத்து பயன்பெறுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

## நாகையில் பரவலாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி



நாகையில் நேற்று பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

பரவலாகமழை

நாகையில் கடந்த சில தினங்களாக வெயில் அடித்து வந்தது. தென்மேற்கு வங்க கடல் பகுதியில் நிலைக்கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடந்த சில தினங்களாக தமிழகத்தின் கடலோர மாவட்டங் களிலும், பிற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வந்தது. இந்நிலையில் குமரிக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக நாகை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. நாகையில் கடந்த 17-ந்தேதி காலை லேசாக பெய்ய தொடங்கிய மழை, பின்னர் பலத்த மழையாக பெய்தது. இந்த மழையால் சாலைகளில் தண்ணீர் தேங்கியது. இதைதொடர்ந்து நேற்று முன்தினம் மழைவிட்டு வழக்கம்போல் வெயில் அடித்தது. மீண்டும் இரவு முதல் மழைதொடங்கிபெய்துவந்தது.

விவசாயிகள்மகிழ்ச்சி

நேற்று காலை முதல் மழை விட்டு விட்டு பெய்து வந்தது. தற்போது நாகை மாவட்டத்தில் விவசாயிகள் சம்பா சாகுபடி பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் படிப்படியாக குறைந்து வரும் நிலையில், தற்போது நாகை மாவட்டத்தில்

பெய்யும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த மழையின் காரணமாக பள்ளமான பகுதிகளில் மழைநீர் தேங்கி உள்ளது.

## <u>தேங்காய் பருப்பு ஏலம் மீண்டும் தொடங்கியது விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>

பரமத்தி வேலூரில் தேங்காய் பருப்பு ஏலம் மீண்டும் தொடங்கியது. இந்த ஏலத்தில் தேங்காய் பருப்பு விலை உயர்ந்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சிஅடைந்துஉள்ளனர்.

தேங்காய்பருப்பு

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவில் வேலூர், பரமத்தி, வசந்தபுரம், பாலப்பட்டி, செங்கப்பள்ளி, கரசப்பாளையம், கபிலர்மலை, ஜேடர்பாளையம் மற்றும் கரூர் மாவட்டம் நொய்யல், சேமங்கி, வேலாயுதம்பாளை யம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவில் தென்னை மரங்களை வளர்த்து வருகின்றனர். இந்த பகுதியில் இருந்து, பரமத்தி வேலூர் அருகே பொத்தனூர் வெங்கமேட்டில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை தோறும் நடைபெறும் தேங்காய் பருப்பு ஏல சந்தைக்கு விவசாயிகள் தேங்காய் பருப்புகளை அதி களவில் கொண்டு வருகிறார் கள். இவ்வாறு கொண்டு வரப்படும் தேங்காய் பருப்பு கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண் காணிப்பாளர் முன்னிலையில் மறைமுக ஏலம் விடப்படுகிறது. இந்த ஏலம் முடிந்ததும் விவசாயி களுக்கு உடனடியாக பணம் பட்டு வாடா செய்யப்பட்டு விடும். மீண்டும் தொடங்கியது இந்த நிலையில் கடந்த 3 வாரங்களாக வேளாண் விற்பனை மையத்திற்கு தேங்காய் பருப்பின் வரத்து குறைந்து இருந்ததால் தேங்காய் பருப்பு ஏலம் நடைபெறவில்லை. குறைந்த அளவே தேங்காய் பருப்பினை விவசாயிகள் கொண்டு வந்ததால் வெளி மாவட்டங்களில் இருந்து வந்த வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர். மேலும் ஏலம் விடப்படாததால் விவசாயி களும் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். இந்த நிலையில் கடந்த 3 வாரங் களுக்கு பிறகு தேங்காய் பருப்பு ஏலம் நேற்று முன்தினம் மீண்டும்

தொடங்கியது. கடைசியாக இந்த விற்பனை கூடத்தில் நடைபெற்ற மறை முக ஏலத்தில் தேங்காய் பருப்பு கிலோ ஒன்று ரூ.78.15-க்கு விற்பனை யானது.

விலைஉயர்வு

கடந்த 3 வாரங்களுக்கு பிறகு நேற்று முன்தினம் நடைபெற்ற மறைமுக ஏலத் திற்கு 198 கிலோ தேங்காய் பருப்பு ஏலத்திற்கு வந்திருந்தது. இதில் தேங்காய் பருப்பு கிலோ ஒன்று ரூ.80.26-க்கு ஏலம் போனது. மீண்டும் தேங்காய் பருப்பு ஏலம் தொடங்கியதோடு, இந்த வாரம் தேங்காய் பருப்பு வரத்து சற்று அதிகரித்து, விலையும் கூடுதலாக போன தால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## <u>கோழி இறைச்சி, முட்டை உற்பத்தியில் தமிழகம் 2-வது இடம்</u>



கருத்தரங்கு மலரை அமைச்சர் சின்னையா வெளியிட, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திலகர் பெற்றுக்கொண்டார். அருகில் கலெக்டர் தட்சிணாமூர்த்தி மற்றும் எம்.எல்.ஏ.க்கள், அதிகாரிகள் உள்ளனர்.

நாமக்கல், இந்திய அளவில் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியில் தமிழகம் 2-வது இடத்தில் இருப்பதாக தமிழக கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் சின்னையா கூறினார்.

தேசியகருத்தரங்கு

இந்திய கோழியின அறிவியல் கழகத்தின் 31-வது வருடாந்திர மாநாடு மற்றும் உலகளாவிய வர்த்தகத்திற்கான கோழியின உற்பத்தி என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கு நேற்று நாமக்கல்லில் தொடங்கியது. இந்த கருத்தரங்கிற்கு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திலகர் தலைமை தாங்கினார். நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் துரைசாமி வரவேற்று பேசினார். இதில் தமிழக கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் சின்னையா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு,

கருத்தரங்கு மலரை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- குறைந்த விலையில் தீவனம் தயாரிப்பு, குச்சி தீவன உற்பத்தி, தீவன சேர்க்கை பொருள், தடுப்பூசி உற்பத்தி, நவீன கோழியின இனப்பெருக்க மேலாண்மை, தரமான கோழி குஞ்சுகளை உற்பத்தி செய்தல், தீவன மற்றும் நோய் பகுப்பாய்வு மையங்கள் ஆகிய உயர்ந்த தொழில் நுட்பங்களை கோழிப்பண்ணையாளர்கள் பின்பற்றிய காரணங்களால், கோழி வளர்ப்பு தொழில் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து உள்ளது. கோழிப்பண்ணை தொழில் ஆண்டுக்கு 8 முதல் 15 விழுக்காடு வளர்ந்து வரும் நிலையில், வேளாண் தொழில் 1.5 முதல் 2 விழுக்காடு அளவே வளர்ந்து வருகிறது. தனிமனிதனுக்கு 164 முட்டைகள் 2011-12-ம் ஆண்டில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட கால்நடை பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.4 லட்சத்து 59 ஆயிரத்து 51 கோடி ஆகும். இதில் கோழி இறைச்சி மூலம் ரூ.36 ஆயிரத்து 123 கோடி மற்றும் முட்டை மூலம் ரூ.17 ஆயிரத்து 803 கோடி வருவாய் ஈட்டப்பட்டு உள்ளது. 2013-14-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த முட்டை உற்பத்தி 7,343 கோடி ஆகும். இதில் தமிழகத்தின் பங்கு 1,420 கோடி ஆகும். இந்தியாவில் 2011-12 கணக்கெடுப்பின் படி தனி மனிதனுக்கு கிடைக்கும் முட்டையின் எண்ணிக்கை 55 ஆகும். ஆனால் தமிழகத்தில் தனிமனிதனுக்கு கிடைக்கும் முட்டையின் எண்ணிக்கை 164 ஆகும். இந்தியாவின் மொத்த உற்பத்தியில், தமிழகம் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியில் 2-வது இடத்தில் உள்ளது. முன்னோடி மாநிலமாக மாறும். பின்தங்கிய மாவடடங்களில் கோழி வளர்ப்பை பிரபலப்படுத்த தமிழக அரசு 2012-13-ல் ரூ.22.35 கோடி செலவில் கோழி வளர்ப்பு திட்டத்தை திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட 7 மாவட்டங்களில் அறிமுகப் படுத்தியது. அதில் வெற்றிகண்டதை தொடர்ந்து, 2013-14-ல் இத்திட்டம் சிவகங்கை, வேலூர் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இதே போல்

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நாட்டுக்கோழி வளர்ப்பை தமிழகத்தின் 16 மாவட்டங்களில் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தை பொறுத்த வரையில் 2012-13-ல் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த முட்டையின் அளவு 1193 கோடி ஆகும். அது 2013-14-ல் 1,255 கோடியாக உயர்ந்து உள்ளது. அதுபோல கோழி இறைச்சி 3,334 ஆயிரம் டன்னில் இருந்து, 4 ஆயிரத்து 96 டன்னாக உயர்ந்து உள்ளது. தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்களால், கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி அதிகரித்து, இந்தியாவில் தமிழகம் ஓர் முன்னோடி மாநிலமாக மாறும் என்பது உறுதி. இந்தியாவிலேயே முதன் முதலாக கோழியின மேலாண்மை கல்லூரி தமிழகத்தில் ஓசூரில் உருவாக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தை பொறுத்த வரையில் இதுவரை பறவைகாய்ச்சல் நோய் இங்கு வரவில்லை. இனிமேலும் அது வராது. இவ்வாறு அமைச்சர் சின்னையா கூறினார்.

அதிநவீனஇறைச்சிகூடம்

முன்னதாக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திலகர் தலைமை தாங்கி பேசும்போது, தீவன மூலப்பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த உயர்மட்ட குழு அமைத்து கொள்கை ரீதியான முடிவுகள் எடுக்க பண்ணையாளர்களுக்கு உதவ வேண்டும். இங்கு அதிநவீன இறைச்சி கூடம் ஒன்று அமைத்தால், கோழிகளை இறைச்சிகளாக மாற்றி, பதப்படுத்தி அதிக விலைக்கு விற்பனை செய்ய முடியும் என்றும், ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிக்கும் என்றும் கூறினார். இதில் இந்திய கோழியின அறிவியல் கழகத்தின் தலைவர் பிரபாகரன், பொதுச் செயலாளர் சக்சேனா, கலெக்டர் தட்சிணாமூர்த்தி, எம்.எல்.ஏ.க்கள் கே.பி.பி.பாஸ்கர், உ.தனியரசு, நாமக்கல் நகராட்சி தலைவர் கரிகாலன் மற்றும் 14 மாநிலங்களை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முடிவில் இந்திய கோழியின அறிவியல் மாநாட்டின் அமைப்பு செயலாளர்

மணி நன்றி கூறினார். தொடர்ந்து இந்த கருத்தரங்கு இன்றும், நாளையும் நடக்கிறது.

## ஆத்தூரில் வேளாண்மை தொழில்நுட்ப மாநில கருத்தரங்கம் பாரிவேந்தர் பங்கேற்பு

ஆத்தூர் அம்மம்பாளையத்தில் ஒருங்கிணைந்த முற்போக்கு தொழில்நுட்ப விவசாயிகள் சங்கம் சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மாநில கருத்தரங்கம் நடந்தது. ராசி விதைகள் நிறுவனங்களின் தலைவர் டாக்டர் எம்.ராமசாமி தலைமை தாங்கினார். இந்திய ஜனநாயக கட்சி பொதுமேலாளர் பி.ஜெயசீலன் முன்னிலை வகித்தார். ஒருங்கிணைந்த முற்போக்கு தொழில்நுட்ப விவசாய சங்க தலைவர் ஏ.சண்முகவேல் மூர்த்தி வரவேற்றார். கூட்டத்தில் இந்திய ஜனநாயக கட்சி நிறுவன தலைவர் பாரிவேந்தர் கலந்து கொண்டு பேசுகையில், தற்போது மாறி வரும் கால சூழ்நிலைக்கேற்ப விவசாயிகள் விவசாயத்தை விஞ்ஞான தொழில்நுட்ப முறையில் செய்ய வேண்டும். விவசாயிகளின் முன்னேற்றத் திற்காக பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது என்றார். இதில் பா.ஜனதா மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகர், எம்.பி.நாகராஜன், எம்ஜிபி மார்க்கெட்டிங் எம்.ஜி.பழனிவேலன், துணை பேராசிரியர் எஸ்.பாபு, புதுச்சேரி வனப்பாதுகாவலர் சத்தியமூர்த்தி, எம்.அண்ணாத்துரை ஆகியோர் பேசினர். முடிவில் ஜி.ஆர்.முருகன் நன்றி கூறினார்.

## தஞ்சை மாவட்டத்தில் 4-வது நாளாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி



தஞ்சை மாவட்டத்தில் 4-வது நாளாக மழை பெய்தது. இதனால் சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். 4-வது நாளாக மழை வங்கக்கடலின் தென்மேற்கு பகுதியில் நிலை

கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலையால் கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வந்தது. அந்த காற்றழுத்த தாழ்வு நிலை அங்கிருந்த நகர்ந்து குமரிக்கடல் பகுதியில் நிலைக்கொண்டுள்ளது. இதனால் தஞ்சை மாவட்டத்தில் நேற்று 4-வது நாளாக மழை பெய்தது. தஞ்சையில் இடைவெளி விட்டு, விட்டு மழை பெய்தது. இந்த மழையினால் தரைக்கடை வியாபாரிகள், தள்ளுவண்டி வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மேலும் பெரும்பாலான சாலைகள் பெயர்ந்து குண்டும், குழியுமாக உள்ளது. இதனால் வாகனங்களில் செல்வோர் மிகவும் சிரமப்படுகின்றனர். இதேபோல் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இந்த மழையினால் சம்பா சாகுபடி செய்துள்ளவிவசாயிகள்மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

மழைஅளவு

தஞ்சை மாவட்டத்தில் நேற்றுகாலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பதிவான மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:- அதிராம் பட்டினம்-8.9, கும்பகோணம்-11.6, பாபநாசம்-14.2, தஞ்சை-2.2, திருவையாறு-6, திருக்காட்டுப்பள்ளி-10, வல்லம்-1, கல்லணை-11, அய்யம்பேட்டை-12, திருவிடைமருதூர்-8, மஞ்சலாறு-9.4, நெய்வாசல்தென்பாதி-1.4, பூதலூர்-10.4, வெட்டிக்காடு-5.8, ஒரத்தநாடு-1.2, பட்டுக்கோட்டை-1.5, பேராவூரணி-5, அணைக்கரை-9.2, குருங்குளம்-14. தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 142 மில்லிமீட்டர் மழை பெய்தது. சராசரி மழைஅளவு 6.8 மில்லிமீட்டர் ஆகும். இந்த ஆண்டு இதுவரை 871.27 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது.

## 115 அடியை தொடுகிறது மணிமுத்தாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்வு தாமிரபரணியில் மீண்டும் வெள்ளம்



விக்கிரமசிங்கபுரம், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த பலத்த மழை காரணமாக மணிமுத்தாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்து, 115 அடியை (மொத்த கொள்ளளவு 118 அடி) தொடும் நிலைக்கு உயர்ந்தது. பாபநாசம் அணையில் இருந்து உபரிநீர் அதிகம் திறக்கப்பட்டு இருப்பதால், தாமிரபரணியில் மீண்டும் வெள்ளப்பெருக்கு உருவாகி இருக்கிறது.

<u>நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை</u>

நெல்லை மாவட்டம் பாபநாசம் மலையில் மீண்டும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. குறிப்பாக பாபநாசம் அணை, சேர்வலாறு அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மிதமான மழையாகவும், இடையிடையே பலத்த மழையாகவும் பெய்கிறது. இதனால் பாபநாசம் அணைக்கு கணிசமான நீர்வரத்து இருக்கிறது. ஏற்கனவே பாபநாசம் அணை முழு கொள்ளளவான 142 அடியை எட்டிவிட்டதால் அணைக்கு தண்ணீர், உபரிநீராக அப்படியே வெளியேற்றப்பட்டு வருகிறது. பாபநாசம் அணைக்கு மட்டும் சுமார் 3 ஆயிரத்து 500 கன அடி தண்ணீர் நேற்று காலையில் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர்மட்டம் உச்சப்பட்ச அளவான 141.90 என்ற அளவில் நிலை நிறுத்தப்பட்டு இருக்கிறது.

<u>தாமிரபரணியில் வெள்ளம்</u>

பாபநாசம் அணை பகுதியில் 32 மில்லி மீட்டர் மழையும், கீழ் அணை பகுதியில் 17 மில்லி மீட்டர் மழையும் பதிவாகி இருக்கிறது. பாபநாசம் அணையில் 3,500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு இருப்பதாலும், காட்டாற்று வெள்ளம் தாமிரபரணியில் கலப்பதாலும், ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பாபநாசம் மலையில் உள்ள மற்றொரு அணையான சேர்வலாறு அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் 144.91 அடியாக இருந்தது. நேற்று காலையில் 145.14 அடியாக நீர்மட்டம்

உயர்ந்தது. இந்த அணை பகுதியில் 16 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருக்கிறது.

<u>மணிமுத்தாறு அணை</u>

நெல்லை மாவட்டத்தின் மற்றொரு பிரதான அணையான மணிமுத்தாறு அணை நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. அணைக்கு இப்போது இருப்பது போல் கணிசமான நீர்வரத்து இருந்தால், இன்னும் ஓரிரு நாட்களில் அணை நிரம்பிவிடும் என்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய தகவல் ஆகும். மணிமுத்தாறு அணை 118 அடி கொள்ளளவு கொண்டது. இவ்வாறு முன்பு அணை நிரம்பிய போது 117.50 அடிக்கும் அதிகமாக தண்ணீரை தேக்கி வைத்த பின்பே, உபரிநீர் திறந்து விடப்பட்டு இருக்கிறது. எனவே இம்முறையும் 117 அடிக்கு மேல் தண்ணீர் தேக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<u>2 அடி உயர்வு</u>

நேற்று முன்தினம் காலையில் அணையின் நீர்மட்டம் 111.80 அடியாக இருந்தது. நீர்வரத்து கணிசமாக இருந்ததால், ஒரே நாளில் சுமார் 2 அடி அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்து, நேற்று காலை 7 மணி அளவில் 113.80 அடியாக அதிகரித்தது. அப்போது அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 582 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மாலையில் நீர்மட்டம் 114 அடியை கடந்து, 115 அடியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

எனவே இன்று மாலைக்குள் அணையின் நீர்மட்டம் மேலும் அதிகரிக்கக்கூடும். பரந்துவிரிந்த மணிமுத்தாறு அணையில் 115 அடி அளவுக்கு தண்ணீர் நிரம்பி இருப்பதால், அணை கடல் போல் காட்சி தருகிறது. ஆனால், பாபநாசம் அணை அளவுக்கு மணிமுத்தாறு அணை பகுதியில் நேற்று மழை இல்லை. வெறும் 3 மில்லி மீட்டர் மழையே பதிவாகி இருக்கிறது. அணை நிரம்ப இன்னும் 3 அடியே தண்ணீர் தேவைப்படும் என்பதால், மணிமுத்தாறு பாசன விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியில் உள்ளனர். பருவமழை சராசரி அளவைவிட, சற்று

கூடுதலாக பெய்துவிட்டாலே பாபநாசம் அணை வேகமாக நிரம்பிவிடும். ஏனெனில் அந்த அணைக்கான நீர் ஆதாரம் அதிகமானது. ஆனால், மணிமுத்தாறு அணை என்பது பருவமழை தீவிரமாக பெய்தால் மட்டுமே நிரம்பும். கடந்த 5 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது மணிமுத்தாறு அணை முழுகொள்ளளவை எட்டும் நிலைக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவில் ஆங்காங்கே சில இடங்களில் மழை பெய்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு மில்லிமீட்டரில் வருமாறு:– அம்பை–2.2, ஆய்குடி–3.2, சேரன்மாதேவி–3.6, நாங்குநேரி–2, பாளையங்கோட்டை–2, ராதாபுரம்–4, செங்கோட்டை–1, சிவகிரி–1.2, தென்காசி–7.4, நெல்லை–0.6, ஆலங்குளம்–9.

<u>கோவிலை வெள்ளம் சூழ்ந்தது</u>

தாமிரபரணியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால், நெல்லை குறுக்குத்துறை முருகன் கோவிலை வெள்ளம் சூழ்ந்தது. ஏற்கனவே கரையோர பகுதி மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

## <u>திருவாரூர் மாவட்டத்தில் பலத்த மழை குடவாசலில் அதிகபட்சமாக 20 மில்லி மீட்டர் பதிவானது</u>

திருவாரூர் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. குடவாசலில் அதிகபட்சமாக 20 மில்லி மீட்டர் பதிவானது. காற்றழுத்த தாழ்வு நிலை வங்க கடலின் தென்மேற்கு பகுதியில் கடந்த சில நாட் களுக்கு முன்பாக காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இதன்காரணமாக திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 3 நாட் களாக தொடர்ந்து மழை பெய் தது. பெரும்பாலும் அதிகாலை நேரத்திலேயே பலத்த மழை பெய்தது. பகல் நேரங்களில் வானம் மேக மூட்டத்துடன் தூவானம் விட்டபடி இருந்தது. இதேநிலையே மாவட்டம் முழுவதும்

கடந்த 3 நாட்களாக நீடித்து வந்தது. இதனிடையே வங்க கடலின் தென்மேற்கு பகுதியில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை, குமரி கடல் பகுதியில் நிலை கொண்டது. இதனால் தொடர்ந்து மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது. அதன்படி நேற்று திருவாரூர் மாவட் டத்தில் பரவலாக மழை பெய் தது. கடந்த சில நாட்களை விட நேற்று மாவட்டம் முழு வதும் மழைப்பொழிவு அதிக மாக இருந்தது. அதிகாலையில் மழையுடன் குளிர்ந்த காற்றும் வீசியது.

பலத்த மழை திருவாரூரில் நேற்று அதி காலை சிறு, சிறு தூறல்களுடன் பெய்ய தொடங்கிய மழை, காலை 8 மணி அளவில் பலத்த மழையாக பெய்தது. இந்த மழை சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது. அதன்பின்னர் மதியம் 12 மழை அளவில் மீண்டும் பலத்த மழை சுமார் அரை மணிநேரம் நீடித்தது. இதை யடுத்து மாலை வரை தூறல் போட்டது. இதேபோல, குடவாசல், முத்துப்பேட்டை, நீடாமங்கலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், நன்னிலம் பகுதிகளில் நேற்று பரவலாக மழை பெய்தது. முத்துப்பேட்டையில் நேற்று முன்தினம் இரவில் இருந்தே மழை பெய்தது. இங்கு நேற்று காலை 8 மணி முதல் 10 மணி வரை பலத்த மழை பெய்தது. இதனால் அரையாண்டு தேர்வு எழுத சென்ற பள்ளி மாணவ, மாணவிகள் பலர் நனைந்தபடியே சென்றனர்.

மழைஅளவு

நேற்று காலை 8½ மணி நிலவரப்படி குடவாசலில் அதிகபட்சமாக 20 மில்லி மீட்டர் மழை பதிவானது. மாவட்டத்தின் மற்ற இடங் களில் பதிவான மழை அளவு விவரம் மில்லி மீட்டர் அளவு களில் வருமாறு:- முத்துப்பேட்டை -16, வலங்கைமான்- 6, நன்னிலம் -4, மன்னார்குடி-3, பாண்ட வையாறு தலைப்பு-2, திரு வாரூர்-1, நீடாமங்கலம்-1, திருத்துறைப்பூண்டி-1. மாவட்டம் முழுவதும் சரா சரியாக நேற்று 6 மில்லி

மீட்டர் மழை பதிவாகி இருந்தது. மொத்த மழை அளவு 55 மில்லி மீட்டர் ஆகும்.